# தென்னகம்

ஆசிரியர்: K.A. மதியழகன்

மலர் - 1 | 27 - 11 - 59 வெள்ளி | இதழ் - 45


## " தலைமைப் பீடம் "

K.A. மதியழகன்

"மிகவும் அப்பாவிகள்''

"மிகவும் விஷயம் தெரியாதவர்கள்''

"மிகவும் புகழ்போதையில் வெறிகொண்ட பேராசைக்காரர்கள்''

இப்படிப்பட்ட வகையைச் சேர்ந்தவர்கள் மட்டுமே தற்போதைய காங்கிரஸ் தலைமைப் பீடத்திற்கு ஆசைப்பட முடியும் என டில்லி பத்திரிகையொன்று வேடிக்கையாக எழுதியுள்ளது.

வேடிக்கையிலும் விஷயம் இல்லாமல் இல்லை.


காங்கிரஸ் தலைமைப்பீடமென்பது எத்தகைய கொலு பொம்மையாகி விட்டது என்பது அரசியல் நிகழ்ச்சிகளைக் கவனிப்பவர்கள் தெரிந்திருக்கிருர்கள்.

அப்படியாஞல் ஆந்திர முதலமைச்சர் திரு. சஞ்சீவிரெட்டி "மிகவும் அப்பாவி!'' "விஷயம் தெரியாதவர்' "புகழேணியில் ஏற வேண்டும்'' என்ற வெறி கொண்டவர் என்று சொல்லுகிறீர்களா என்று கேட்டுவிடாதீர்கள்! திரு. சஞ்சீவரெட்டியின் ஆந்திர நண்பர்கள் கோபாவேசம் பூண்டு விடுவார்கள். என்ன இருந்தாலும் நமது உடன் பிறப்புகள்! "சஞ்சீவரெட்டியைப் பற்றி என்ன உங்களுக்குத் தெரியும். பெரும் ஆற்றலாளர். எதிர் நீச்சல்க்காரார். எளிமையின் உறைவிடம். சச்சரவுகள் நிறைந்த ஆந்திரத்தில் சமாதானம் நிலவச் செய்த பெருந்தலைவன். சண்டமாருதமென எழுந்த பகை பொடி பொடியாகியது. அவர் இல்லா விட்டால் ஆந்திரம் எங்கோ இருந்த இடம் தெரியாது போயிருக்கும். துடி துடிப் பானவர், பொறுப்பை கொடுக்காமலே [illegible] கெட்டிக் காரரா என்று [illegible]டி முடிவு கட்டுவது'' என்று காரசாரமாகக் கூறுவார்கள்.

ஆஞல் இப்போதெல்லாம் காங்கிரஸ் தலைமைப் பதவி என்பது கோபுரக் கலசம் என்பது சகலருக்கும் புரிந்துள்ளது. பண்டித நேருவும், கோவிந்த வல்லபபந்தும். மற்றைய பெருந்தலைவர்களும் நடத்தும் செயல்களுக்கு 'ஆம்' போடவேண்டிய தலையாட்டி பொம்மை வேலை தான் என்பதற்கு விவாதம் தேவையில்லை. வேறு சில பணிகளையும் சேர்த்துக்கொள்ளலாம். காங்கிரஸ் ஊழியர்கள் கூட்டத்தில் ஒற்றுமையை உபதேசம் செய்ய வேண்டும். காந்தி ஜெயந்தி, சுதந்திர தினம் போன்ற நாட்களில் முன்வரிசையில் சர்க்கா நூற்க வேண்டும். அவ்வப்போது காங்கிரஸ் அக்கிராசனர் என்பதை நினைவுபடுத்த அறிக்கைகள் விடவேண்டும்.

மெயில் பத்திரிகை 'பொம்மை யானை' என்ற தலைப்பிட்டு ஓர் கார்ட்டூன் வெளியிட்டுள்ளது. நாலு சக்கரம் அமைந்த ஓர் மொட்டை வண்டி. வண்டியை யிழுத்துச்செல்லும் கயிற்றை பண்டிதநேரு பிடித்திருக்கிருர். வண்டிப்பலகையின் மீது "காங்கிரஸ் தலைமைப் பதவி'' என்ற பொம்மை யானை வைக்கப் பட்டுள்ளது. அதன் மீது திரு. சஞ்சீவ ரெட்டி ஏறி அமர ஓர் ஏணி சார்த்தப் பட்டிருக்கிறது. ஏணிப்படியிலிருந்து விழாமலிருப்பதற்கு பக்கத்தில் பந்த், மொரார்ஜி, இந்திரா ஆகியோர் நிற்கின்றனர். படம் போதிக்கும் பாடத்தையாரும் மறுத்து விட முடியாது.

சஞ்சீவி ரெட்டி டில்லி வந்தார். பண்டித நேருவையும்பந்த்தையும் சந்தித்தார். திருமதி




இந்திரா காந்தி அபேட்சைப் பத்திரத்தை முன்மொழிந்தார், "பெருந் தலைவர்கள் கட்டளை அதுவாஞல்எனதுமுதல் மந்திரி பொறுப்பை உதறிவிட தயங்க மாட்டேன்'' என்று தனது விசுவாசத்தைக் காட்டிக் கொண்டார்.

இவ்வளவுபெரியத் தலைமைப்பீடத்தேர்தல் டில்லியில் பரபரப்பை உண்டு பண்ணவில்லை. அவர்கள் கவனமெல்லாம் மக்மகன் எல்லைக் கோட்டிலும்சிங்கியாங் ரஸ்தாவிலும், நேரு சீனுவுக்கு இடும் நிபந்தனைகளிலும் மூழ்கிக் கிடக்கிறது. தவறில்லை. நாட்


(8-ம் பக்கம் பார்க்க)

# முல்லை மடல்

## குற்றவாளி பிறப்பதில்லை !

அன்புள்ள சித்ரா,

'அடுத்த வாரம், வரைகிறேன் மடல்' என்ற என் வாக்குறுதியை நிறைவேற்ற முடியவில்லை, என்னால். அதற்காக கோபித்துக் கொள்ளாதே, கண்ணே !

இன்று உன்னை ஒரு விசித்திர புரிக்கு அழைத்துச் செல்லப் போகிறேன். துப்பறியும் நவீனங்களில் உன் சிந்தையை பறிகொடுத்திருக்கும் உனக்கு, 'இந்த விசித்திர உலகத்தை' அறிந்துக் கொள்ள ஆவலாகக் கூட இருக்கும். எங்கேயோ, அடிவானத்திற்கப்பால் உள்ள நாடல்ல, நான் குறிப்பிடும் விசித்திரப்புரி. கற்பனையில் கண்ட நகரமும்மல்ல. நான் குற்ப்பிடும் விசித்திரபுரியின் பிரஜைகள் உன்னையும், என்னையும், சுற்றி, நாட்டில் பல்வேறு பாகங்களிலும் நடமாடிக்கொண்டிருக்கிறார்கள்.

நீதியும், நேர்மையும், சட்டமும், இந்த விசித்திரப் புரியை 'குற்றப்புரி' யென்றும், அதனின் 'பிரஜைகளை' குற்றவாளிகள், என்றும் அழைக்கிறது.

அந்த குற்றப்புரியைப் பற்றிதான் உனக்கு சொல்லப் போகிறேன், இந்த மடலில் !

என் அன்பே ! உன் அத்தை கிராமம்; சிந்தகம் பள்ளியில், சிந்தை. அணு, ஒவ்வொன்றையும் சிலிர்க்கச் செய்யும்' நிகழ்ச்சி ஒன்று சென்ற திங்களில் நடந்திருக்கிறது. அதை அறிவாயா, நீ?

பாவாடையும், சட்டையும் அணியும் பருவ பெண்ணொருத்தி – பதினான்கு வயது முதிராத பாவை, ஏழுவயதுநிரம்பிய பெண்ணை, கொலை செய்திருக்கிறாள், கண்ணே! நீ நம்பக்கூட மாட்டாய் – ஆனால் இது நடந்திருக்கிறது. இந்தக் கொலை, திட்டமிட்டு செய்யப் பட்டிருக்கிறது. கொலைச் செய்து, அந்த பிரேதம் பத்திரமாக புதைக்கப் பட்டுக் கூட இருந்ததாம்! பார்த்தாயா, சித்ரா, சின்னஞ் சிறு வயதுப் பெண், அறிவு முதிராத வயதினள், செய்திருக்கும் துணிகரச் செயலை, இந்த கொலைக்குக் காரணம், அந்த சிறுமி அணிந்துக் கொண்டிருந்த, வெள்ளி காப்பும், செயினும் தான். அதை அபகரிக்கவே, இந்த கொலை. பிஞ்சு உள்ளத்தில் எழுந்த நகை ஆசை, கொலையிலேப்போய் முடிந்திருக்கிறது.

இதுப்போல நிகழ்ச்சிகள்— கொலை, களவு, கொள்ளை, வழிப்பறி, இத்யாதிகள் நாள் தோறும் நாட்டின் பல்வேறு பாகங்களில் நாட்தவறாமல் நடந்துக் கொண்டிருக்கிறது. பத்திரிக்கைகளை புரட்டினால், பக்கத்திற்குப் பக்கம், விசித்திர புரியனரின் துணிகரச்செயலைக்காணலாம்; கண்ணுக்கு தெரிந்தது இவ்வளவு; தெரியாதது எவ்வவவோ! அரசாங்கம், குற்றவாளிகளை தண்டிப்பதோடல்லாமல், அவர்களைப் பற்றிய செய்திகளையும் சேகரித்து, சேமித்து வைக்கிறது. அவர்கள் கண்களுக்கு மிளகாய் பொடி தூவி விடுவோரும் உண்டு.

இந்தியஉபகண்டத்தில் உள்ள பல்வேறு இராஜ்ஜியங்களில் நடைபெற்ற பல்வேறு குற்றங்களின் கணக்கை கவனி :

1951-ம் ஆண்டு 6.91 லட்சம்
1955-ம் ,, 5.35 ,,
1958-ம் ,, 5.91 ,,

இதில்கொலைக்குற்றங்கள் :

1957-ம் ஆண்டு 10.419
1958-ம் ,, 10,149ஆகும்

எல்லா இராஜ்யங்களைவிட அதிகமாக கொலைகள் நடைபெறும் இராஜ்யம், மத்திய பிரதேசமாகும் ! இதிலும், வடநாடு தென்னாட்டை மிஞ்சியிருக்கிறது நகரங்களில் பணப்புரியான பம்பாயும், தலைநகரான டில்லியும், தலைமை வகிக்கின்றன !

குற்றங்கள் பலதரப்பட்டவை. வழிப்பறியில் வழிமுறை பல உண்டு. கொலையில் பலவிதம் உண்டு. இந்த நாட்டு மக்களால் செய்யப்படும் குற்றங்களோடு அடங்கிவிடுவதில்லை இந்தக் குற்றம்பட்டியல். வெளிநாடுகளோடுகூட இதற்கு தொடர்பு உண்டு.

இங்கே பணியாற்றிவந்த விமான கம்பெனி ஒன்று சில காலத்திற்கு முன்பு 'தங்கக் கடத்தல்' குற்றத்தை செய்தது. ஆனால் தற்போது அதிக அளவு தங்கம் கடல் மார்க்கமாகதான் இந்நாட்டிற்குள் நுழைக்கப்படு

முல்லைசக்தி

கிறது. இவையெல்லாம் வெளிநாட்டிலுள்ளோர், இந் நாட்டில் செய்யும் குற்றங்கள்.

அரசாங்கமும், போலீசும், சுங்க அதிகாரிகளும், கண்களை அகல விரித்துக்கொண்டு, குற்றவாளிகளை பிடிக்க வலைவீசிக் கொண்டிருந்தாலும், வெளிநாட்டிலிருந்து இங்கு தங்கம் தங்கு தடையின்றி நுழைந்துவிடுகிறது. மீரட்டில்உள்ள ஒரு தங்க வியாபாரி, 'டைலி டெலிகிராப்' என்ற நிருபரிடம் கூறினாராம்; 'எனக்கு இங்கும் சுவர்ஜலாந்திலும் அலுவலகங்கள் இருக்கின்றன. என் பெயரை வெளியிடாதீர்கள் என்னுடைய 'வியாபாரம்' இந்தியாவில் வெற்றிகரமாக நடைபெறுகிறது. 'இப்பொழுக்கூட நான் அனுப்பிய சரக்கு சவுக்கியமாக இந்தியாவின் பரந்தவெளியில் போய் சேர்ந்ததாகத்தகவல் வந்துள்ளது'' என்று. என்ன துணிச்சல் பார்த்தாயா அந்த வியாபாரிக்கு?

இயற்கை அழகையெல்லாம் ஒன்ற சேர குவித்துக்கொண்டிருக்கும் சிங்களத் தீவிலிருந்து ஏராளமான 'அபின்' தமிழக கரையோரங்களில், கட்டுக்காவலை மீறி தாராளமாக தவழ்கிறது ! இவையெல்லாம் பெரும் புள்ளிகள் செய்யும் குற்றங்கள் ! இந்த குற்றங்களில் அப்பாவிகள் அகப்பட்டுக்கொள்ளுகிறார்கள். பெரியவர்கள் தக்க பாதுகாவல் ஏற்பாடு செய்து தப்பித்துக் கொள்ளுகிறார்கள்.

பொருளாதாரசிர்குறைவுநிரம்பியுள்ள பிரதேசங்களில் கொள்ளை அதிகமாக நடக்கிறது.'கொள்ளை அடிப்பதையே தொழிலாகொண்டிருப்பதே முக்கியகாரணமாகும். மத்திய பிரதேசம், பீஹார், உத்திர பிரதேசம், ஆகிய ராஜ்யங்களில்தான் இத்தகைய கொள்ளைகள் ஏராளயாக நடைபெறுகின்றது. கிராமங்களை சூரையாடுதல், ஆளை அபகரித்துச் சென்று அதற்கு ஈடு வாங்குதல் அதை தடுப்போரின் தலையைத் துண்டித்தல் ஆகியஅடாத செய்கைகள் இந்த பிரதேசத்தில் சர்வசாதாரணமாக நடைபெறுகிறது. இதை தடுப்பதற்கு பல்வேறு இராஜ்ஜியங்களின் போலீஸ் படை பணிபுரிகிறது. கிராமங்களில் பாதுகாப்புபடை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மத்திய பிரதேசத்தில் 1956-ம் ஆண்டு 438 கொள்ளையும், 1958-ல் 247 கொள்ளையும் நடந்திருக்கிறது !

வடநாட்டையே கிடுகிடுக்க வைத்த மான்சிங் ஆகியோரைப் பற்றி நீ அறிவாயா? சாம்பல் நதி தீரத்தில் தனது சாம்ராஜ்யத்தை அமைத்து அரசாண்டு வந்தவன்தான், சமீபத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட மான்சிங் ! கொள்ளைக்காரர்களின் ஏக சக்கராதிபதி ! 1926-ம் ஆண்டிலிருந்து அவன் இந்த திருப்பணியில் ஈடுபட்டிருந்தான். 200 கொலைகளும், ஆயிரம் கொள்ளையும் அவனாலும் அவன் சம்மந்தப்பட்டவர்களாலும் செய்யப்பட்டிருக்கிறது. அவனை பிடித்துத் தருவோருக்கு ரூ. 35,000 பரிசு அளிப்பதாக அரசாங்கம் அறிவித்திருந்தது.

அவன் நடத்திய தர்பார் நாட்டையே கிடுகிடுக்கச் செய்தது அரசாங்கம் அவனை பிடிக்க ஏராளமானபணத்தை செலவழித்தும் பலமுறை தோல்வியையே தழுவியது. இறுதியில் 1955-ம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் இருபத்தைந்தாம் நாள் அவன் சுட்டுக் கொல்லப்பட்டான்.

அதன்பின் அந்த சாம்ராஜ்ஜியம் சரிய ஆரம்பித்தது. அதன்பின் மான்சிங்கிடம் விசேஷ பயிற்சிப்பெற்ற ரூபா தலைமைப்

(6-ம் பக்கம் பார்க்க)

## வேந்தன் விசார[illegible]
## குறையுமா ? வளருமா ?

ஈரான் நாட்டுசிம்மாதனம் 2,500 ஆண்டுகளாக நிலவிவருகின்றஒன்றாகும். அதனைத் தொடர்ந்து கட்டிக்காக்க இருமனைவிமார்களினாலும் 'வாரிசு' கொடுக்க முடியவில்லை. எனவே மூன்றாவது முறையாகத் திருமணம்செய்ய ஈரான் மன்னர் ஷாமுடிவு செய்துள்ளார்.


ஈரான் ஷாவிற்கு மனைவியாகும் பேறு பெற்றவர், பாரிஸ் பட்டணத்தில் சிற்பக்கலைக்கல்லூரியில் படித்து கொண்டிருந்த மாணவி ஒருவர். பராடியா என்பது அந்நங்கையின் நாமம். சிறுவதில் விளையாடுகின்ற பொழுது பராடியாவிற்கு ராணி வேடம் போட்டு. தோழிகள் கேலி செய்வது வாடிக்கை. ஈரான் ஷாவின் இரண்டாவது மனைவி சொரையாவிவாகரத்து செய்துகொண்டு பிரிகின்ற நேரம் அது; பாரடியாவின் தோழி ஒருத்தி அவரிடம், 'நீதான் இந்நாட்டின் ராணியாகப் போகிறாய் என்று வேடிக்கையாகச்சொன்னாராம். அது இன்று உண்மையாகி விட்டது.

எனது நாட்டின் நலன் கருதியும், மக்களின் விருப்பத்தை நிறை வேற்றவும் இத்திருமணத்தைச் செய்து கொள்கிறேனே தவிர, மனமார இம் முயற்சியில் எனக்கு விருப்பமில்லை என்று ஷா குறிப்பிடுகிறார். முன்னாள் எகிப்து மன்னர் பருக்கின் சகோதரி பாஷியா, அவரின் முதல் மனைவி.

இரண்டாவது மனைவியாக ஜெர்மன் நாட்டுப் பேரழகி சொரையாவை 1950-ல் ஏற்றுக் கொண்டார். முதல் மனைவி போலவே இவருக்கும் 'விவாகரத்து' கொடுக்க வேண்டியிருந்தது. ஷாவின் விருப்பங்களுக்கு விரோதமாகவே இவைகளெல்லாம் நடந்தது.

தனிவாழ்வில் போலவே, பொது வாழ்விலும் பல புயலைத்தாங்க வேண்டியிருந்தது. 1949-ம் ஆண்டு கயவன் ஒருவனின் துப்பாக்கிக் குறியினின்றும் தப்பினார்—இரண்டு குண்டுகளால் மட்டும் சிறு காயங்கள் ஏற்பட்டன.

பராடியாவின் மாளிகை நுழைவு, ஷாவின் விசாரத்தைக் குறைக்குமா? பெர்ஷிய நாட்டின் சிம்மாதனத்தை நிலை நிறுத்துமா? என்று உலகு கூர்ந்து கவனித்துக் கொண்டுள்ளது.



மலர் 1] [இதழ் 45

# "இல்லை" யென்று – சொல்ல முடியுமா?

இந்திய ஐக்கியத்தை பலப்படுத்துவதற்கு இப்போதுள்ள இந்திய அரசியல் சட்டம் தடையாக உள்ளது. அதனை அப்புறப் படுத்தி வலிமை மிகுந்த ஓர் மத்திய அரசை நிறுவ வேண்டுமென்று முன்னாள் பிரதம நீதிபதி மகஜன் அவர்கள் 'இந்து' பத்திரிகையில் தீட்டிய கட்டுரைகளையும், திரு. சந்தானம் அவர்கள் மகஜன் கூற்றை மறுப்பதைப் போல் துவங்கி அரசியல் சட்டத்திற்கு வக்காலத்து வாங்கியுள்ள விந்தையையும் ஏற்கெனவே வெளியிட்டுள்ளோம்.

இந்த விவாதத்தைத் தொடர்ந்து கடந்த வெள்ளிக்கிழமை 'இந்து' இதழில் பேராசிரியர் இரத்தினசாமி அவர்கள் தீட்டியுள்ள கட்டுரையில் பொருள் பொதித்த பல உண்மைகள் மிளிருகின்றன. பேராசிரியர் இரத்தினசாமி, அவர்கள் பல்வேறு நாடுகளின் அரசியல் சட்டங்களை கற்றுத் தெளிந்த பேரறிவாளர். தனிநாடு பிரிய வேண்டும் என்ற கொள்கை கொண்டவரல்ல. எனினும் திரு. மகஜன் அவர்கள் கூற்றுக்கு அவர் கூறும் விடையில் இந்திய அரசியல் சட்டத்தின் அவலட்சணமும், அவலநிலையும் தெளிவாக விளங்குகின்றன.

அரசியல் சட்டம் என்பது அதிகாரம் பெற்ற தஜ்தாவேஜி. அதன்வேலை ஏற்கெனவேயுள்ள ஐக்கியத்திற்கு இலக்கணமும் விளக்கமும் தருவதே தவிற ஐக்கியத்தை உருவாக்கும்கருவியல்ல என்று வலியுறுத்துகிறார். பழைய ரோமானிய சாம்ராஜ்யம், மத்தியகால நார்மன் அரசுகள், ஐரிஷ் பிரிவதற்கு முன்பிருந்த பிரிட்டிஷ் ராஜ்யங்கள் ஆகியவற்றில் தெளிவில்லாத அரசியல் சட்டங்கள்தான் உலவின. சமஷ்டி நாடுகள் என்று சொல்லப்படும் வடஅமெரிக்க காலனிகளும், ஸ்வட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த பிராட்டஸ்டண்ட், கத்தோலிக்க கான்டன்களும் ஒற்றுமையை உருவாக்கிய பின்னர்தான் தனக்கென அரசியல் சட்டங்களைத் தீட்டின.

அரசியல் சட்டம் ஒன்றினாலேயே திரு. மகஜன் கனவு காணும் ஐக்கியத்தை நிலைநிறுத்தமுடியாது என்பதற்கு அமெரிக்க உள்நாட்டுப் போரும், தென்அமெரிக்கா ஐக்கிய அமெரிக்காவிலிருந்து பிரிந்ததும் வரலாறு காட்டும் எச்சரிக்கை பாடமாகும்.

திரு. மகஜன் அவர்கள் இட்டுக் கட்டுவதைபோல் தற்போது மாநிலங்கள் நிறைய அதிகாரத்தைப் பெற்றிருக்கவில்லை. தோற்றத்திற்கு சமஷ்டி முறைபோல் இருந்தாலும் மத்திய அரசின் பிடியிலேதான் எல்லா அதிகாரங்களும் கொடுக்கப் பட்டுள்ளன.

மாநில அதிகார அட்டவணை, மத்திய சர்க்கார் அட்டவணை, இரண்டும் ஒத்துப்போக வேண்டிய அட்டவணை என்ற முப்பெரும்பிரிவில், மாநிலசர்க்காரின் அதிகாரங்களை குப்பைக் கூடையிலேபோடும் அளவிற்கு, மத்திய சர்க்காரின் சட்டம் தான் செல்லும் என்று 254 – வது விதிமுறை கூறுகிறது.

உதாரணத்திற்கு, கிரிமினல் சட்டங்கள், விவாகரத்து, பொது அமைதி பாதுகாப்பு, தொழிலாளர் நலன், தேசிய முக்கியத்வம் பொருந்திய எனக்கருதப்படும் தொழிற்சாலைகள், வழக்கு மன்றங்களின் அதிகாரங்கள், அறநிலையங்களின் சொத்துக்கள், செய்திப் பத்திரிகைகள் போன்ற 47 இனங்களில், மாநில சர்க்காரும் சட்டமியற்றி, மத்திய சர்க்காரும் சட்டமியற்றி இரண்டிற்கும் முரண்பாடு இருந்தால் மத்திய சர்க்காரின் சட்டம்தான் செல்லுபடியாகும்.

மாநில சர்க்காரின் அதிகார அட்டவணையில் உள்ள எந்த இனத்தை பொறுத்தவரையிலும் இராஜ்ய சபையின் அங்கீகாரத்துடன் சட்டமியற்ற மத்திய சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த மூன்று அட்டவணைகளில் இல்லாத எந்த இனம் குறித்தும், மாநிலங்களின் மீது சட்டவிலங்குகளைப்பூட்ட இன்றைய அரசியல் சட்டம் இடம்தருகிறது. எனினும் ஏதோ நிறைய அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டிருப்பது போலவும், அவைகளைக் குறைப்பதே மிக அவசியமானது போலவும் விளம்பரப்படுத்தப்படும் நஞ்சு எண்ணங்கொண்ட கருத்துக்களை, உரிமை வேட்கையில் கவலைகொண்டவர்கள் ஊன்றி கவனிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அதிகாரங்கள் குவிக்கப்பட்டிருப்பது, கனவு காணும் ராஜ்யத்தை உடைத்தெறிவதற்கு பயன்படும் பேராபத்தில் முடியலாம். பத்து லட்சம் சதுரமைல் பரப்புள்ளதும், முப்பத்தைந்து கோடி மக்களை கொண்டதும் பல்வேறுமொழிகளையும், பல்வேறு மதங்களையும்கொண்டதுமான வெவ்வேறான பூபாகங்களை ஒரே இடத்திலிருந்து ஆளுவதென்பது முடியாத காரியம் என்று பேராசிரியர் இரத்தினசாமி அறுதியிட்டுக் கூறியுள்ளார். துருக்கியரின் பரந்த உதுமானிய சாம்ராஜ்யங்களில்கூட அதிகார கடிவாளங்கள் இறுக்கப்படாமல் தளர்த்தப்பட்டுத்தான் இருந்தன. ஜனநாயகத்தின் சாரமே அதிகாரங்களை பரவலாக்குவதில் தான் இருக்கிறது. லார்ட் ஆக்டன் என்பார் "எல்லாப்பகுதிகளிலும் எல்லா அம்சங்களிலும் தழுவி நிற்கிற சுயாட்சிக்குப் பெயர்தான் உண்மை ஜனநாயகம். அந்த ஜனநாயகம் ஓர் பரந்த பூபாகத்தில் நிலவி, பல்வேறு சுதந்திர தனி நாடுகளின் கூட்டமைப்பாக [கான்பெட்ரேஷன்] இருக்க வேண்டும்" என்று இலக்கணம் கூறினார். டி. டொக்யூவில் எனும் அரசியல்மேதை அதிகாரங்கள் குவிக்கப்படுவதால் ஏற்படும் பயங்கரத்தை நல்லமுறையில் படம் பிடித்துக்காண்பித்துள்ளார். "அதிகாரங்கள் குவிக்கப்பட்டிருக்கும் மத்திய அரசு சில நாட்களுக்கு உற்சாகமாகக் காணலாம். ஆனால் அங்கே பொதுமக்கள்உணர்வுமக்கிமடிகிறது, சில குறிப்பிட்ட நெருக்கடியானதருணங்களில் அதுநல்லதுபோல காட்சியளிக்கலாம். போர்க்குழப்ப காலத்தில் வெற்றிகரமாய் தோன்றலாம். மின்னல்போல் தோன்றி மறைகிற ஓர்பெரும் தலைவனின் ஜொலிப்புக்கு பயன்படலாம். ஆனால் ஓர் பூபாகத்தின் எல்லாக் கால வளர்ச்சிக்கு அது உகந்ததல்ல. நலம் பயக்காது" என்பது அவரது ஆராய்ச்சி அனுபவ உண்மைகளாகும்.

எனினும் மனதில் எதையோ எண்ணி திரு. மகஜன் அவர்கள் வேறு காரணங்களை காண்பிக்கிறார். லஞ்சஊழல், நிர்வாக ஒழுங்கீனம் அரசுகளின் திறமைக்குறைவு ஆகிய வற்றை சுட்டிக்காட்டி, ஆகவே அதற்கு அரசியல் சட்டத்தை மாற்றவேண்டும் என வற்புறுத்துகிறார். இதற்கு பேராசியர் இரத்தினசாமி அவர்கள் தொடுத்துள்ள சில கேள்விக்கணைகளுக்கு திரு. மகஜன் மாத்திரமில்லாமல் நமது மந்திரிமார்களும் பதில் சொல்லக் கடமைப் பட்டுள்ளார்கள். இந்தக் கேள்விகளை அரசியல் மேடைகளிலே சொல்லும்போது. அவைகளுக்கு உள் நோக்கம் கற்பித்து ஒதுக்கும் ஆளவந்தார், வயது முதிர்ந்த இந்த பெரியவருக்கு என்ன பதிலை சொல்ல இருக்கிறார்கள் என்பதை தெரிய விரும்புகிறோம்.

"சட்டசபை உறுப்பினர்களாக தகுதியுடையோர் தேர்ந்தெடுக்கப் பட்டால், சர்க்கார் ஊழியர்களுக்கு சலனத்திற்கு ஆட்படாத வகையில் நல்ல சம்பளம் அளிக்கப் பட்டால், நீதிபதிகளை நிர்வாகயந்திரம் கட்டுப் படுத்தாமலிருந்தால், பெரும்பதவிகள், தகுதியுடையவருக்கேத் தவிற அபிமானம் பெற்றவர்களுக்கு அல்ல, என்று இருந்தால், வலிமை பொருந்திய எதிர்க்கட்சி இருந்தால் நல்ல சர்க்கார் அமைய முடியும்" என்று கூறிவிட்டு இன்றுள்ள சர்க்கார்களைக் குறித்து கீழேயுள்ள வினுக்களை எழுப்பியுள்ளார்.

இன்றைய தினம் பல்வேறு சட்ட மன்றங்களுக்கும் தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள், ஆற்றல், தகுதி, மக்களிடம் மரியாதை ஆகியவைகளை அளவிட்டு தேர்ந்தெக்கப்படுவதில்லை. அதற்குபதிலாக எந்தெந்த வட்டாரத்தில் எந்தஜாதிக்காரர் பெரும் பான்மையினர், எந்த ஆள் வளைந்து நெளிந்து கொடுக்கக் கூடியவர் என்ற அடிப்படையில்தான். தேர்ந்தெடுக்கப்படுகின்றனர் இதனை இல்லையென்றுசொல்ல முடியுமா?

எனவே அவர்கள் அக்கரையற்றவர்களாவும் சொப்பன உலகத்தில் சஞ்சரிப்பவர்களாயும் உள்ளனர் – 'இல்லை' யென்று சொல்ல முடியுமா?

அரசாங்க அன்றாட நடவடிக்கைகளில் அதிகாரிகளின் செயல்முறையில் மந்திரிகள் தலையிடுகின்றனர். இல்லை யென்று சொல்ல முடியுமா?

(6–ம் பக்கம் பார்க்க)



# கொங்குநாட்டு தீரன் சின்னமலை

## மாவிலை மெத்தையிலே!

### 7

முத்துவேலப்பரின் மாளிகை சோபை இழந்து காணப்பட்டது.

கொஞ்ச நாட்களாய் வள்ளி நாயகி துரும்பாய் இளைத்திருந்தாள். அவள் மெலிவுக்காரணம் தெரியாதமுத்துவேலப்பர், செல்வமாக வளர்த்த சிங்கார மகள் தன்னை பிரிந்துபோக வேண்டியுள்ளதே என்ற ஏக்கம் அவள் உடலைப் பற்றிக்கொண்டதாக தனக்குத்தானே காரணம் சொல்லிக்கொணடார்.

"இப்படியெல்லாம் இருக்கக் கூடாதம்மா! சுறு சுறுப்பாய் வாரிமுடித்துக்கொண்டு அழகாய் இருக்க வேண்டாமா? கலியாணமாகப் போகிற பெண்! என்னம்மா செய்ய முடியும்? பெண்களென்ருல் யார் வீட்டுக்காவது போய்தான் ஆக வேண்டும். தகப்பன் வீட்டிலேயேவா இருக்க முடியும்?" என்று அடிக்கடி சொல்லுவார். சமாதானம் சொன்னுரே தவிற, அவரது நிலையே பரிதாபமாய்தான் இருந்தது. கண்களின் ஓரத்திலேதேங்கும் கண்ணீரை அவசர அவசரமாக வள்ளிநாயகிக்குத் தெரியாமல் மேல் துண்டால் துடைத்துக் கொள்வார்.

வள்ளிநாயகி முன்போல கலகலவெனப் பேசுவதில்லை. எதையோப்பறி கொடுத்தவள்போல் ஏங்கி நின்ருள். எங்கிருந்தோ, ஏதோ குதிக்கப்போகிறது. அது அவளின் நம்பிக்கை நட்சத்திரமாய் அமையப் போகிறதுஎன்று கருதுபவள் போலவும் தோன்றினுள்.

பழனியிலிருநது திரும்பியதும் அவள் ஆட்டமெல்லாம் அடங்கிவிட்டது. ஆரம்பத்தில் எதிர்காலத்தில் தான் வாழப்போகும் இன்ப வாழ்வை நினைத்து மன மகிழ்ந்தாள். இத்தனை நாளும் அவள் பார்த்துக்கொண்டிருந்த வெண்ணிலாவும் நட்சத்திரக் கூட்டமும் புதுப்புதுகற்பனைகளை கிளறியது.

"எத்தனையோ பௌர்ணமிகள் வீணுகிவிட்டன. இன்னும் எத்தனை பௌர்ணமிகள் வீணுக வேண்டுமோ" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டாள்.

**K.A.மதியழகன்**

நட்சத்திரங்கள் கண் சிமிட்டுவதை, தன் அருமைக் காதலன் தன்னைபபார்த்து சிரிப்பதாக எண்ணி அவளும் சிரித்துக் கொள்வாள்,

மலர்கள் எப்போதும் தான் மணத்தை வாரி வழங்கிக்கொண்டிருந்தன. ஆனுல் இப்போதெல்லாம் அந்த சுகந்தத்தில் புதிய சுகத்தை அனுபவித்தாள்.

புள்ளினங்களின் மதுரகீதம், புதிய புதியநினைவுகளைத்தந்தன.

ஆரம்பத்தில் ஆனூர்க் கோட்டை வாலிபர் அவசியம் தன்னை சந்திப்பார் என்ற உறுதி இருந்தது. பழனியை விட்டு விடியற்காலை கிளம்பும்போதுகூட இனி அவரைக் காணமுடியாதே என்ற அவநம்பிக்கை அவள்உள்ளத்தில் எழவில்லை. மிகவும் கெட்டிக்காரர், எப்படியும் என்னைக் கண்டுகொள்வார் என்று அசட்டுத் தைரியம் கொண்டிருந்தாள்.

ஆனுல் மாதங்கள் பல ஓடிவிட்டன. அவரைக் காணேம். அவள் பேதை உள்ளம் என்ன வெல்லாமோஎண்ணத் தொடங்கியது.

ஒருவேளை அந்தவீரர் என்னை மறந்திருப்பாரோ — சேச்சே! அவர் பார்வையைப் பார்த்தால் அப்படியில[illegible]ஒருக்காலும் இருக்க முடி[illegible]

ஒரு வேளை எங்காவது வேறு இடத்திற்குபோர்செய்யஅனுப்பிவிட்டார்களோ — இந்த நினைவு வரும்போது அவள் உடம்பெல்லாம் சில்லிட்டது. ஒளிவீசும் வாட்கள் கூக்குரல்— கதறல் — செம்பருத்தி நிறமமைந்த ரத்த ஆடை — பிணவாடை — அழிவு — கோரம் அதற்குமேல் அவள் சிந்திக்கவேயில்லை.

ஒரு வேளை வேறு எந்தப் பெண்ணையாவது மணந்திருப்பாரா? நிச்சயம் அவர் செய்யமாட்டார். ஆனுல் அவர் வீட்டாரின் வற்புறுத்தலுக்கு இணங்கி மாலை சூட்டியிருந்தால் — அவளுக்கு சிந்தனை ஓட மறுத்தது. ஆண்களே அப்படித்தான்! அக்கரையே இருப்பதில்லை. அவர்களுக்கு மட்டும் என்னைப்போன்றபேதை பெண் நெருப்பிலேயிட்ட புழுப்போல துடிப்பதைஉணர முடிவதில்லை இந்த இம்சையைவிட அன்றுநான் நெருப்புப்பட்ட நேரத்தில் இறந்திருந்தால் எவ்வளவோ நன்றுயிருந்திருக்கும்.

நான் கதைகளிலே கேட்டிருக்கிறேன். ஆண்களே சபலபுத்திக்காரர்கள். விரைவில் மறந்து விடுவார்களென்று. ஆனுல் ஆனூர்க்கோட்டை வாலிபரை இந்த ரகத்தில் நான் சேர்க்கவில்லை. என் உள்ளம் இன்னமும் ஏனே அவர் பக்கம்தான் சேர்ந்துகொள்கிறது.

ஒரு வேளை காடுமேடெல்லாம் தேடி அலுத்து விட்டாரோ! நான்அவ்வளவு 'அடம்' பண்ணியிருக்கக் கூடாது!

"யாருடன் வந்தாய்? அவர்களெல்லாம் எங்கே? நீ மட்டும் தனியாக இங்கு மாடிமீது......" என்று எவ்வளவு ஆவல் ததும்பக் கேட்டார். பாவி நான்! கடைசியிலே சொல்லிவிடுவோம் என்று காலங்கடத்தி வேடிக்கை செய்தேன். வேடிக்கை என் வரையில் எவ்வளவு வேதனையாகிவிட்டது. காலமும் கடந்து கொண்டே இருக்கிறது. அந்த வேளையில் தானு சனியன் படிக்கதவைத் தட்டித் தொலைக்க வேண்டும், நான் விபரம் கூறியிருந்தால் இவ்வளவு சிரமம் நேர்ந்திருக்காது.

இப்போது மேலப்பாளையம் குடும்பத்தில் சம்பந்தம் செய்ய வேண்டும் என்று அய்யா ஒற்றைக்காலில் தவம் கிடக்கிருர். அவர் காலில் விழுந்து கண்ணீர் பெருக்கி, உங்கள் ஒரே மகளின் ஆசையை நிர்மூலமாக்கிவிடாதீர்கள் என்று கெஞ்சிக் கதறுவதாக இருக்கின்றேன். என்னவோ எனது மன திருப்திக்கு விரோதமாக நடக்கமாட்டார் என்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்.

அவர் பிடிவாதமாய் இருந்து மேலப்பாளையம் குடும்பத்திற்கு நான் வாழ்க்கைப்பட்டு என் இதயம்கவர்ந்தவனை அங்கே சந்தித்தால் எவ்வளவு லட்சணமாய் இருக்கும்! அய்யோ! என் வாழ்க்கையே இருண்டுவிட்டது போல் தோன்றுகிறதே.

சாதாரண வீட்டுப் பெண்ணுயிருந்தாலும் அக்கம்பக்கத்தில் கேட்டு அவரைப் பற்றியாவது விசாரித்திருக்கலாம். நானே பெரிய இடத்துப்பெண்! நல்ல பெரிய இடம். எந்த ஏழை வீட்டிலாவது பிறந்திருந்தால் வானம்பாடிபோல உலவி வந்திருப்பேன். இங்கோ பாலும் பழமும் அளிக்கப்பட்டாலும் கூண்டிலேயிருக்கும் பஞ்சவர்ணக் கிளியானேன். எப்படி மனதைத் திடப்படுத்திக்கொண்டு "என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட கள்வன் மகன் ஆனூர் கோட்டையைச் சேர்ந்தவன். அந்த இரக்கமற்றவனைப் பார்த்தால் பரிதாபததிற்குரிய ஓர் அப்பாவிப்பெண் உனக்காகச் செத்து மடிந்துக்கொண்டிருக்கிருள். சீக்கிரம் போய் காப்பாற்று" என்று சொல்லி அனுப்புவது.

இவ்வளவு எண்ணங்களும் அலைமோதிய வள்ளிநாயகிக்கு

மாளிகை பெரும் சிறைச்சாலை போலத் தோன்றியது. சாளரக் கம்பிகளெல்லாம் காரக்கிரகத்தை நினைவூட்டியது. இதயத்தில் அதிகமாக துக்கம் ஏற்படும் போதெல்லாம் அவளுக்கு ஆறுதல் அளித்தது, மாளிகையைச் சேர்ந்துள்ளமாமரச்சோலைதான். அங்கே சென்று மரநிழலிலோ வரப்பின் மேலே மணிக் கணக்கிலே அமர்ந்து விடுவாள்.

அதிகாலையிலேயே இவ்வளவு சுமை இருப்பது அவளுக்கு ஆச்சரியமாய் இருந்தது. முந்தின நாள் இரவு முழுதும் தூங்கவில்லை. அழுது அழுது அவள் கண்கள் வீங்கியிருந்தன. தோட்டத்துப் பக்கம் கிளம்பினுள்.

கிணற்று மேட்டின் அருகில் ஓர் தண்ணீர் தொட்டி உண்டு. கிணறு இறைக்கவில்லை. தொட்டியில் பாதி தண்ணீர் நிறைந்து இருந்தது. கண்ணுடி போல் நீலவானமும், மேகங்கள் நகருவதும் தொட்டியில் தெரிந்தது. தொட்டிச் சுவரில் கையை ஊன்றி உள்ளே உற்றுநோக்கினுள். வள்ளிநாயகியின் உருவம் தான் தெளிவாக பிரதிபலித்தது. தனது சொந்த உருவமென்று அவளாலேயே நம்பமுடியவில்லை அவள் கண்கள் வீங்கியிருந்தன. சுடர்விடும் வதனத்தில் சோக ரேகைகள் படிந்திருந்தன. பயங்கரமான இந்த மாற்றத்தை பார்த்துக் கொண்டேயிருந்தாள். பக்கத்தில் குதிரையின் மீது ஓர் ஆள் வந்து நின்ற அரவம் அவள் காதுகளிலே படவில்லை.

திரும்பிப் பார்த்தாள். அவளால் நம்ப முடியவில்லை. கண்களை கசக்கிக் கொண்டாள்.

"நீங்களா?" என்று ஆச்சரியத்துடன் கூறினுள். கூறிவிட்டு சரிதானு என்று அவசர அவசரமாகப் பார்த்தாள்.

"நீயா?" என்றுன் பெரிய தம்பி.

அவன் குரலைக் கண்டு கொண்டாள். "அவரேதான்!" என்று சொல்லிக் கொண்டாள். ஆரம்பத்தில் அவனையே தியானம் செய்து கொண்டிருந்ததால் ஒரு வேளை உருவெளித் தோற்றமோ என்று பயம் இருந்தது. அந்த சந்தேகம் பறந்து விட்டது.

"யாருடன் வந்தாய்? இவர்களெல்லாம் யார்? நீ மட்டும் இங்கே தனியாக மாமரச்சோலையில்..." என்று கேட்கப் போகிறீர்களா? ஒருமுறை வந்த ஆபத்தே போதும் இனி விளையாட மாட்டேன்!"

"கும்பிடப் போனதெய்வம். குறுக்கே வந்தது!"

"நான் தெய்வமும் ஆகவேண்டாம். நீங்கள் கும்பிடவும் வேண்டாம். சாதாரன பெண்ணுகவே இருந்தால் போதும்"

"நான் நினைக்கவேயில்லை!"

"நீங்கள் நினைத்திருந்தால் இப்படி தவிக்க விட்டுருப்பீர்களா? போர்வீரர்தானே. அவர்களுக்கு பச்சாதர்பம் எங்கே இருக்கப் போகிறது. நீங்கள் மட்டும் அன்று என் வாழ்வில் குறுக்கிடாது இருந்தால் எவ்வளவோ நிம்மதியாக இருந்திருக்கும். இப்போது மட்டும் ஏன் நினைத்தீர்கள்"

"நான் அதைச் சொல்லவில்லை. இங்கே உன்னை சந்திக்கப் போகிறேன் என்று நினைக்க வேயில்லை!"

"நான் சொல்லியதில் தவறில்லை"

"கோபித்துக் கொள்ளாதே" என்று சொல்லி விட்டு நிறுத்தினுன். "எவ்வளவு நேரம் மொத்தமாகவே அழைத்துக் கொண்டிருப்பது உன் பெயர் தான் என்ன? எவ்வளவு நாழிகை மறைக்கப் போகிருய்!"

"என் பெயர் இல்லாததுதான் குறையாம்" என்றுள். அருகே இருக்கும் மாமரத்தின் கனிகள் பழுத்து குலுங்கிநின்றன. அவைகளின் மீது அவள் பார்வை தெறித்தது.

"என் பெயர் மாங்கனி" என்றுள்.

"மாங்கனி! மதுரமான பெயர் ஆனுல் அந்தமரத்திலேயிருக்கும் மாங்கனிகள் தினந்தோறும் உன்னுடைய கன்னக் கதுப்புகளிலே சிவப்பு நிறத்தை இரவல் வாங்குகிறதாக்கும்!"

"இங்கு ஒன்றும் இரவல் வேலையில்லை சரி! என்னைப் பார்க்க வரவில்லையென்றீர்கள். பின்பு எங்கே வந்தீர்கள்! நானேர் பைத்தியக்காரி! உங்களைப் பார்த்ததும் பார்க்காதமாய் பரவச மடைந்து விட்டேன். நமது அன்பரின் மேல் வைத்திருந்த நம்பிக்கை பாழகவில்லை. பாரடி அந்த பார்த்திபன் உன்னைத் தேடி வந்திருக்கும் திருக்கோலத்தை என்று என் மனம் கர்வம் கொண்டது"

"மாங்கனி! நீ அறிய மாட்டாய் என்மனநிலையை, கார்த்திகை தீபம் கழிந்தது. என் வாழ்வின் தீபத்தையே எடுத்துக் கொண்டு வந்து விட்டாய், இனி நீ.திரியேற்றி [illegible]யூற்றினுல் தான் என் [illegible] தீபமே எரியும். நான் [illegible]த இடமில்லை திரியாத திக்கில்லை. நீ எங்கோ மாமரச் சோலையிலே ஒளிந்து கொண்டுள்ளாய்"

"சொல்வதற்குள்தான் ஓடி விட்டீர்களே, அவசரக்காரர். இந்த ஆண்களே பயங்காளிகள்"

"சரி, சரி. இதுதானே முத்துவேலப்பரின் மாளிகை. இங்கே ஆள் அம்பே கிடையாதா? குரல் கொடுத்தாலும் பதில் இல்லை. எல்லாம் திறந்து போட்டிருக்கிறது. நீ இங்குதான் இருப்பதா? உன் வீடு எங்கே இருக்கிறது. இங்கு என்ன வேலை?"

"முத்துவேலப்பரின் மாளிகை தான்! சந்தேகப் படவேண்டாம்! நான் பிறந்தது முதல் இங்கே தான் இருக்கிறேன். வேலைக்காரி என்று வேண்டு மானுலும் வைத்துக் கொள்ளுங்கள். வீட்டுக்காரியென்று வேண்டுமானுலும் வைத்துக் கொள்ளுங்கள்"

"விடு கதையிலேதான் இருக்கிருய்! விபரமாய் சொல்லு இந்தவீட்டுக்கு உறவு முறையா?

"நல்லவேலை! புள்ளி மான் தேடி வந்தேன், இங்கு வள்ளி மான் அப்பட்டது என்றுராமே முருகன், அதுபோல்"

"நான் முருகனுமல்ல. நீ வள்ளியுமல்ல"

"நீங்கள் முருகனல்லதான், ஆனுல்" என்று களுக்கென்று சிரித்தாள். தொடர்ந்து மானைத் தேடி வரவில்லை. மாங்கனிதேடி வந்தேன் இந்த மாங்கனி அகப்பட்டாள் என்று சொல்லுவீர்கள் போல இருக்கிறது"

"நான் சொல்லித் தெரிய என்ன இருக்கிறது, மாங்கனி" கூறிக்கொண்டே கீழே, யிறங்கினுன்.

கண்ணும் கண்ணும் கலக்கும் போது வாய்ப்பேச்சுமதிப்பிழந்து விடுகிறது. மாவிலைமெத்தையில் பெரிய தம்பி அமர்ந்திருந்தான். அவன் மடியில் மாங்கனி. அவன் பார்வை பட்டவுடன், பத்தரை மாத்துத் தங்கமானுள். அவள் பசலை ஒரு நொடியில் பறந்து விட்டது.

"கண்ணுளா! நெடிய இரவு தொலைகிறது. நம் வாழ்வில் இருள் சூழ்ந்து கொள்ளரதே!"

"பெரிய தம்பி, நம்பி வந்த பெண்ணை நட்டாற்றில் கைவிடும் பரம்பரையினனல்ல!"

"பெரிய தம்பி! கண்டு பிடித்து விட்டேன். அதுதானே உங்கள் பெயர்! சொல்ல மாட்டேன்என்றீர்களே! தோல்வியை ஒத்துக் கொள்ளுங்கள். அடடா! கணவர் பெயரைச் சொல்லக் கூடாதே! பரவாயில்லை, இன்னும் நீங்கள் என் கணவரல்ல!"

"மாங்கானி! வேடிக்கையிலேயே விஷயத்தை மறந்து விடக்கூடாது ஒருமுறை செய்த தவறை மீண்டும் செய்யக் கூடாது. முத்துவேலப்பர் எங்கே? அவரை நான் சந்திக்க வேண்டும்"

"ரொம்பவும் அவசரமா? முத்துவேலப்பர்ஊரிலில்லை. ஒரு வேளை மாலை வரலாம்" நீங்கள் இப்போது சந்திக்க முடியாது"

"என்ன அவரிடம் என்னை பெண் கேட்கப் போகிறீர்களா?'

"இல்லை, இல்லை முத்து வேலப்பருக்கு வள்ளிநாயகி என்ற மகளுண்டாமே! உனக்குத் தெரியுமா? நான் பார்க்க முடியுமா?"

"என்ன வள்ளி நாயகியா? ஆமாம்! இருக்கிருர்கன், சாதாரணமாய் பார்க்க முடியாது. ஆனுல் நான் விரும்பினுல் காண முடியும். ஒன்று சொல்லிவிடுகிறேன். உங்கள் எஜமானர் குடும்பத்து சம்பந்தத்தையே அம்மா வேண்டாம்என்கிருர்கள் உங்களுக்கு எங்கே" என்று சொல்லிவிட்டு சிரித்தாள்.

பெரியதம்பிக்கு வேடிக்கை புரியவில்லை. படபடவென்று சொன்னுன் "மாங்கனி நான் மறைக்க விரும்பவில்லை. நான் மேலப்பாளையம் குடும்பத்துப் பிள்ளை. உன்னிடம்பொய்யாகச் சொல்லிவிட்டேன். என் அண்ணன் சின்னமலை முத்துவேலப்பரின் மகளை பெண்பேசிவிட்டார். என் மாங்கனியைத் தவிற வேறெருருத்தியை நான் எப்படி மணப்பேன்? அண்ணனுக்கும் திருமணமாகவில்லை. முத்துவேலப்பரிடம்கூறி ஏற்பாட்டை மாற்ற வந்துள்ளேன், அந்த திருமணம் நடந்தவுடன் நமது திருமணம்! வள்ளிநாயகி குணவதிதானு? என்அண்ணனுக்கு ஏற்றவளா? பேசக்கூட வேண்டாம்! பார்த்தால் போதும்" என்று அடிக்கிக் கொண்டே போனுன்.

வள்ளிநாயகிக்கு ஆச்சரியம் தாங்கவீல்லை. ஒருபக்கம் பெருமகிழ்ச்சி வேருேர்பக்கம் அதிசய உணர்வு, சகலமும்அவளுக்குப் புரிந்தது. இருப்புக்கொள்ளவில்லை.

"ஒரு நிபந்தனை" என்றுள்.

"ஆயிரம் நிபந்தனையோடு நிறைவேற்றி வைக்கிறேன்'

"வள்ளிநாயகியை பார்க்க வேண்டும் என்கிறீர்கள். பார்த்தவுடன் அவள் அழகில் மயங்கி அவளையே திருமணம் செய்வது என்று முடிவுக்கு வந்துவிட்டீர்களானுல் என்கதி என்னுவது?"

"என்னையும் மாங்கனியையும் யாராலும் பிரிக்கமுடியாது"

என்னவோ நம்புகிறேன் பெண்பாவம் பொல்லாதது மாளிகை முற்றத்திற்கு போங்கள் வள்ளிநாயகியை அழைத்து வருகிறேன்'

பெரியதம்பி மாளிகைக்குச் சென்றுன் மிக்க அடக்கத்துடன் வள்ளிநாயகியும் மாங்கனியும் வருவார்கள் என்றுஎதிர்பார்த்து கொண்டிருந்தான்.

சிறிது நேந்த்தில் பட்டாடை அணிந்து ஆபரணங்கள் பூண்டு மலர் சூடி திலகமிட்டு புதுப் பெண் போல மாங்கனிவந்தாள். மாங்கனி இவ்வளவு அழகியா என பெரியதம்பிக்கு ஆச்சரியமாய் இருந்தது. வந்த வேலையையும் கவனிக்கக்கருதி "மாங்கனி! வள்ளிநாயகி எங்கே? வருகிருர்களா?" என்றுன்.

வந்துவிட்டார்கள்! இனிவர மாட்டார்கள்! நான்தான் வள்ளி நாயகி! என்றுள்.

பெரியதம்பியின் கால்களும் உடலும் பூமியிலேயில்லை. வான மண்டலத்திலே எல்லையற்ற உயரத்திலேபறந்துகொண்டிருந்தது.

தொடரும்

## நமது வாழ்த்துக்கள்!

★

கடந்த சில நாட்களாக சென்னை நகரில் நடைபெறும் கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டிகளில் நமது இயக்க மாணவ நண்பர்கள் வெற்றிவகை சூடி வருகின்றனர். 8–11'–59 அன்று மயிலை கலைக்கழகத்தின் ஆதரவில, பேச்சுப் போட்டியொன்று மயிலாப்பூர் பி.எஸ். உயர்நிலைப்பள்ளியில் நடைபெற்றது. அதில், தி. மா. மு. க. செயற்குழு உறுப்பினரும், ஜெயின் கல்லூரி மாணவருமான தோழர். ச. கிருஷ்ணன் (பி.எஸ்ஸி.) அவர்கள்முதல் பரிசு பெற்று வெற்றி பெற்றுள்ளார்கள். அவருக்கு நமது பாராட்டுதல் வாழ்த்துக்கள்!

## முல்லை மடல்...!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பதவியை ஏற்றான். அவனைப் பிடித்துத்தருவோருக்கு ரூபாய் 15,000 அளிக்க உத்திரபிரதேச அரசாங்கமும், மததிய பிரதேச அரசாங்கமும் அறிவித்தது. சாப்பாட்டிற்கு அந்த கூட்டம் நாளொன்றுக்கு நூறுரூபாய் சில வழித்து வந்ததாம். கிராமங்களில் போலீஸ் உடையோடு அவனது ஆட்கள் உலா வருவார்களாம். அவனும் கடந்த மாதம் சுட்டுக் கொல்லப்பட்டான் !

இவர்கள் இருவரைவிடஅதிகமாகசபார்சிங் என்பான் காட்டுதர்பார்நடத்தி வந்தான். அவனை பிடித்து தருவோருக்கு ஐம்பதினாயிரம்ரூபாய் பரிசளிக்க முன் வந்ததுஅரசாங்கம். 1959ம் ஆண்டு நவம்பர் மாதம் 12-ம் நாள் அவனும், அவனது சகாக்களும் சுட்டிக்கொல்லப்பட்டார்கள் !

ஆண்களுக்கு நாங்கள் இளைத்தவர்களல்ல என்பதைப்போல், பெண்களும் இத்தகைய செயலில் ஈடுபட்டிருக்கிறார்கள் !

புட்லி. அவள்கொள்ளைக்காரிகளின் ராணி ! அவளின் இயற்கைபெயரோ தாகுராணி! அவளின் வாழ்க்கையே விநோதமானது, சித்ரா !

வாழ்க்கையில் வழுக்கிவிழுந்த சமுதாயத்திலே பிறந்தவள் புட்லி.

திருமணம் ஒன்றில் அவள் பாடிக் கொண்டிருந்தாள். அவளின் குரல், கொள்ளைத் தலைவனை சுல்தானாவின் காதுக்களை மட்டும் மல்ல, அவனின் கண்களையும், கருத்தையும் கவர்ந்தது, அங்கிருந்து அவளை அவன் தூக்கிச் சென்றான்.

அவள் அவனின் மஞ்சத்தில் மட்டுமல்ல, அவனின் தொழிலிலும் பங்கேற்றாள். அவர்களின் காதல் சரித்திரம் இன்று கூட அந்த பாகங்களில் மிகச்சுவையாக பேசப்படுகிறதாம்.

சுல்தானாவின் மரணத்திற்குப் பின் புட்லி அக் கூட்டத்திற்கு தலைவியானாள். கணவன் காட்டிச் சென்ற பாதையிலே பயணத்தை துவங்கினாள். மழலைமொழி செல்வத்தை அணைக்க வேண்டிய கரங்கள், துப்பாக்கியை ஏந்தின. கனிரசம் கொப்பளிக்க வேண்டிய கண்களிலே கனல்! புன்னகைஅரும்ப வேண்டிய இதழ்களிலெ, 'போர்' வெறி ... அப்பப்பா ... அவள் ஆடிய ஆட்டம் ... 1959-ம் ஆண்டு நேருவுக்கு ஒரு மன்னிப்பு கடிதம் எழுதினாள். இருதியில் அவளும் சுட்டுக் கொல்லப் பட்டாள். இப்படியாக சாம்பல் நதி தீரத்தில் விளையாடிய 'வீரர்களின்' வாழ்வு அஸ்தமித்தது ! அதற்குப்பின் அங்கு குற்றங்கள் மிக மிக குறைந்துள்ளன ! என்றாலும் நாட்டின் நானாவித பாகங்களிலும், குற்றங்கள் நடைபெற்றுக் கொண்டுதான் உள்ளன. கொலை, களவு, போன்றவைகள் மட்டுமல்லாமல், சூதாட்டம், விபசாரம், மது அருந்துதல் போன்ற குற்றங்கள் ஏராளமாக நடைபெருகிறது ! இவைகளுக்கெல்லாம் காரணம் என்ன ?

குற்றவாளிகள் பெருகுவதின் மர்மம்தான் என்ன? மதவாதிகள் அன்று எழுதியவன் அவன் தலையில் அப்படி எழுதி விட்டான் ஆகவே குற்றவாளியாகி விட்டான் என்பார்கள். ஆனால் மகளே ! குற்றவாளி பிறப்பதில்லை: உண்டாகிறான்.

ரஷ்ய இலக்கியத்தில்தனதுமுத்திரையை பதியவிட்டுச் சென்ற டாஸ் டாவஸ்கி, 'குற்றமும் தண்டனையும்' என்ற பெருங்கதை ஒன்று தீட்டியிருக்கிறான். அதில் நடமாடும் கதாநாயகன் ரோடியன் ரோமனோவிட்ச் ராஸ்கோலினிகாப், கொலை குற்றம் சுமத்தப்பட்டு குற்றவாளி கூண்டிலே அடைபடுகிறான். அவன் சரித்திரத்தை புரட்டிப் பார்த்தால், அவன் குற்றவாளியாக பிறக்கவில்லை. வறுமைத் தேள் கொட்டும் குடும்பத்திலெதான் பிறந்தான். அவன் இதயத்திலெ இரக்கம் சுரந்தது, அவன் கண்களிலே கனிவு பிறந்தது. பிறருக்கு உதவிச் செய்ய வேண்டுமென்ற நல்லெண்ணம் அவன் நெஞ்சத்திலே நர்த்தனமாடியது. அதனின் கோளாறு அவன் கொலையாளியாக மாறினான்! அந்தப் பெருங்கதை மனிதன் குற்றவாளியாக பிறப்பதில்லை, காலமும், சூழ்நிலையும் அவனை உண்டாக்குகிறது என்பதை தெள்ளத்தெளிய எடுத்துக் காட்டுகிறது !

பொருளாதார ஏற்றத் தாழ்வுதான் குற்றவாளிகள் பெருகுவதற்கு முக்கிய காரணங்களாகும். மாடியிலே நிலவொளியிலே மாதுளை ரசத்தை பருகுவதா மாது சிரோன்மணியின் அதர பானத்தை பருகுவதாஎன திகைக்கின்றனர் சிலர் ! குடிசையிலே, எரியும் கும்பியோடு, தேளுக்கும், பாம்புக்கும் கடிபட்டு வதைபடுகின்றனர் பலர். இந்த இரண்டு சமுதாயமும் இணையாதவரையில் குற்றங்கள் பெருகத்தான்செய்யும். எந்தனை எத்தனை பட்டாளம் வந்தாலும், குற்றவாளிகள் உற்பத்தியர்வதைத் தடுக்க முடியாது. அந்த நாள் என்றுவரும்? 'குற்றப்புரி' ஒழியும் நாள் எந்நாள்? அந்நாளே மனித சமுதாயத்தின் இன்பப் பெருநாளாக இருக்கும்.

உன் சித்தப்பா.

## இல்லையென்று சொல்ல முடியுமா...?

(3-ம பக்கத் தொடர்ச்சி)

உதயோக உயர்வு, வேறு இடத்திற்குமாற்றுவது, ஆகியவைகளிலும் மந்திரிமார் தலையிடுகின்றனர், எனவே அதிகாரிகள் கெட்டிக்காரர்களாகவும், திறமையானவர்களாகவும் இருப்பதில்லை. இதனை இல்லை என்று சொல்ல முடியுமா ?

மந்திரிமார்களின் லஞ்ச ஊழலினால் சர்க்கார் ஊழியர்களிடமும் இந்த நோய் பரவி அதிகரித்துவிட்டது. இல்லையென்றுசொல்ல முடியுமா ?

ஏராளமான வாக்குறுதிகளை வழங்குகிறார்கள். அதனை நிறைவேற்றுவதற்கு வேண்டிய பணமும் ஆளும் சர்க்காரிடம் இருப்பதில்லை, அதை மறைப்பதற்கு சாக்குபோக்கு சொல்கிறார்கள். இல்லையென்று சொல்ல முடியுமா ?


மதுரை மாவட்ட திராவிட மாணவர் முன்னேற்றக் கழக

# முதல் மாநாடு

மதுரை, சந்தைப்பேட்டை ஏ. வி. எஸ். எஸ். ரைஸ்மில் காம்பவுண்டில்
(சௌராஸ்ட்ர உயர்நிலைப்பள்ளி எதிர்புறம்)

பேராசிரியர். சண்முகம் பந்தலில், டாக்டர். தருமாம்பாள் அ[illegible]
29-11-59 ஞாயிறு காலை 8 மணிமுதல் மாலை 7 மணிவரை நிகழும்

தலைவர் :
**கே. ஏ. கிருஷ்ணசாமி,**
பி: ஏ. [ஆனர்ஸ்]

★

திறப்பாளர் :
**பி. எஸ். மணியம்,**
பி. ஏ. பி. எல்.

சொற்பொழிவாளர்கள் :

எஸ். டி. சோமசுந்தரம், (பி. இ.)
(தி. மா. மு. க. பொதுச்செயலாளர்)
டி. கே. பொன்னுவேலு, பி. ஏ.
உ. பில்லப்பன், எம். ஏ.
பி. இராசமாணிக்கம், பி. ஏ. பி. எல்.
எம். எஸ். வெங்கடாசலம், எம். ஏ.
இரா. வெங்கடேசன், எம். ஏ.
உ. கணபதி, எம். ஏ.
வி. அருணாசலம், பி. ஏ.
எம். பச்சைமுத்து, எம். ஏ.
ப. நெடுமாறன், பி. ஏ. (ஆனர்ஸ்)
வே. சௌந்தரராசன், பி. ஏ. (பி. எல்.)
பூவை. இராமானுசம், பி. காம்., (ஆனர்ஸ்)
மோகானதாசு, (எம். பி. பி. எஸ்.)
கிருட்டிணன், (பி. எஸ்சி)
என். வி. என். சோமு, (பி. ஏ.)
சா. பெ. மலைச்சாமி, பி. ஏ. (ஆனர்ஸ்)
தோழியர் சற்குணம்,
அ. இளங்கோவன்,
எஸ். ஆர். பாலசுப்ரமணியன்பி.ஏ.(ஆனர்ஸ்)
கே. எஸ். சம்பத்து, பி. இ
மைனர் மோசஸ், பி. ஏ.
ப. வெற்றிச்செல்வன், (பி. ஏ.)
வி. இளம்வழுதி, பி. ஏ. (பி. இ.)

சு. ஆறுமுகம், பி. ஏ. (பி. எல்.)
(கோவை நகராட்சி மன்றத் துணைத்தலைவர்)
கோவை. செழியன், பி. ஏ.
சி. என். ஏ. பரிமளம்,
தி. அழகிரிசாமி, (பி. ஏ. ஆனர்ஸ்)
பி. பாலசுப்ரமணியம், (பி. இ.)
டி. கே. கோபாலகிருஷ்ணன், பி. ஏ.
சீர்காழி. சோமசுந்தரம், பி. ஏ.
இளவழகன், (எம். ஏ.)
இராசகுமார் பீட்டர், பி. ஏ.
சே. என். இராசு,
எம். கருப்புசாமி,
தங்கப்பாண்டியன், பி. ஏ.
மதுரை மா. பாண்டியன்,
இல. மணிமாறன்,
மு. தொண்டமான், பி. ஏ.
அ. பாலு, (பி. ஏ.)
இளங்கார்வண்ணன் (வித்வான்)
முத்து, (பி. ஏ.)
மாறவேள்,
மதுரை வேலவன்,
தவசி,
வெற்றிச்செழியன், (பி. ஏ.)

ஆகியோர் சிறப்புரையாற்றுவார்கள்

கொ. வெற்றிவேந்தன், கோ. சாமி,
மு. தமிழ்ச்செல்வன், சோ. இராசேந்திரன்,
செயலாளர்கள்.

சா. புகழ்மணி,
பொருளாளர்.

கு. இந்திரசித்து,
வ. கு. தலைவர்.

# நீயின்றி நானில்லை!

மலர்க்ள் மலர்ந்து மணம் வீசுகின்ற சோலையிலே பொய்கைக் கரையில் தனியாக உட்கார்ந்திருக்கின்றாள் அவள். பொய்கைப் புனல் அசைவின்றி நிற்கின்றது. அந்நீரில் அவள் தன்னுடைய உருவத்தைப் பார்க்கின்றாள். முன்பிருந்த அழகும் பொலிவும் அவள் முகத்தில் இப்பொழுது இல்லை. புனலில் மேலும் அவளுருவத்தைக் காண முடியாமல் கண்ணீர் திரையிட்டு மறைத்து விடுகின்றது. தலை நிமிர்ந்த அவள் விழிகள் அதோ! அங்குத் தெரிகின்றதே அம்மலையின் மீது படிந்து வருகின்றன. ஆம்! அம்மலை நாட்டைச் சார்ந்தவன்தான் இந்த மங்கையின் மனத்தைக் கவர்ந்து சென்றவன். முன்பெல்லாம் அவன் அடிக்கடி இந்த அழகியைக் காண அவன் வருவான். அவளும் அவனும் அன்பாலே ஆடிப்பாடித் திரிந்த நாட்கள் பலப்பல. "எத்தனை நாட்கள் தாம் மறைவாகக் கூடி உறவாடி மகிழ்வது! திருமணம் என்ற ஒன்றைமுடித்துக் கொண்டால், பிறர் பழிப்புரை இல்லாமல் இல்லறத் தேரை இனிது நடத்திச் செல்லலாமே" என்று எண்ணினாள் அழகி! எடுத்துரைத்தாள் ஆளனிடம். 'அப்படியே செய்வோம்; எப்படியும் நீயின்றி நானில்லை–நானின்றி நீயில்லை' என்று கூறித் திருமணத்திற்குரிய ஏற்பாடுகளை விரைவில் செய்வதாக உறுதி கூறிச் சென்றான் அவன்.

'......அவர், இன்னும் வரவே இல்லை. அவருடைய பெற்றோர்கள் மறுத்துவிட்டனரோ! அன்றி அவர்தாம் வேறு பெண்ணை விரும்பி என்னை மறந்தாரோ! என்று எண்ணி எண்ணிக் கலங்குகின்றாள். அவள் முகத்தில் ஏமாற்றம், ஏக்கம், துயரம் ஆகிய உணர்ச்சிகள் இழைந்தோடுகின்றன.

அவளைத் தேடிவந்த தோழி மெதுவாக அவள்பின்னே வந்து நிற்கின்றாள். அருகுள்ள கொடி மலரைப் பறித்து அவள் மீது எறிந்தாள். அவள் நிலை அதற்குக் கலையவில்லை. பையப்பைய அவள் புறத் தொதுங்கி வந்து கண்களைப் பொத்துகின்றாள். 'விளக்கினைத் தொட்ட பிள்ளை வெடுக்கெனக் குதித்ததைப் போல'க் கைகளைத் திடீரென்று எடுத்துக் கொண்டாள். காரணம் – தலைவியின் கண்ணீர் தான்! கையில் கண்ணீர் பட்டதும் கனல்பட்டது போலாகிவிட்டது அவளுக்கு! தன் பிழையான செயலுக்கு வருந்தி முன் வந்து அமர்கின்றாள் தோழி. தலைவியின் விழிகளிலேதேங்கிய நீர் வழியலாயிற்று. பேச்சின்றிக் கழிந்த சிறிது நேரம். பேசாமல் இருப்பது துன்பத்தை வளர்ப்பதாகுமே என்று எண்ணிய தோழி பேசத் தொடங்கினாள்.

"அன்பே! நான் செய்தது தவறாக இருந்தால் மன்னித்துக் கொள்......

தலைவி:– உம்......!

தோழி:– அம்மலையருவியுடன் தங்கள் விழியருவிக்கு என்ன போட்டியோ!

தலைவி:– தோழி...உம்...!

தோழி:– பொறுத்துக்கொள் அம்மா! அம்மலையை வைத்த கண் வாங்காமல் அப்படி ஏன் பார்த்துக் கொண்டிருக்கின்றாய் என்றுதான் கேட்டேன்!

தலைவி:– அதனைக் கண்டேனும்...ஆறுதல் பெறலாம் என்றுதான்.

தலைவி:– புரிந்து கொண்டேன் அம்மா! புரிந்து கொண்டேன்! அம்மலை நாட்டுக் கட்டழகரைக் காணும் இன்பம் அம்மலையைக் காண்பதிலும் இருக்கின்றதோ?

தலைவி:– போதுமடி உன் விளையாட்டுப் பேச்சு! அதோ! அங்கேபார்! கொடுத்த சொல்லை நிறைவேற்றாத அக்கொடியர். நாட்டு மலையிலும் அருவி புனல் பொங்கித் திரை கொழித்து ஓடுகின்றதே!...

தோழி:– கொடி போன்றவளே! அவரை ஏன் கொடியவர் என்று கூறுகிறாய். இரவென்றும் பகலென்றும் பாராமல், வழித்துயர்கள் பலவற்றையும் பொருட் படுத்தாமல் எத்தனை நாட்கள் வந்து இன்பம் தந்தார்?

தலைவி:– தோழி! நீ உரைத்தனவெல்லாம உண்மையே! ஒவ்வொருபூவும், வண்டு தன்னிடம் வந்து கற்கண்டாய் இசை பாடிக் களிப்புத் தரும்போது, அவ்வண்டிற்குத் தானன்றி உலகில் வேறுதுணை இல்லை என்றே எண்ணி விடுகிறது. வேண்டும் அளவு நறவைக் குடித்து உறவைக் காட்டிய வண்டோ மீண்டும் அம்மலரை நாடாது புதுப் புது மலர்களைத் தேடிச் சென்று விடுகிறது...!

தோழி:– வண்டில்லை அன்பே! அவர் மகன்!

தலைவி:– ஆம்! மகன்தான்! நல்ல மகன் அவர். 'மணம் பேசி வருவேன், மணந்து இன்பம் தருவேன்! என்றெல்லாம் பன்னிப் பன்னிப் பேசிவிட்டு, இன்றுவரை ஒன்றும் செய்யாது அடங்கித் தன்னூரிலே கிடக்கின்றாரே – இதுதான ஆடவர்க்கு அழகோ! அவருக்கு நற்சான்றிதழ் தர வந்து விட்டாய் நீ!

தோழி:– கண்போன்றவளே! அவர் அருளற்ற இருள் மனம் படைத்தவரல்லர். வருத்தத்தால் பொருத்த மற்ற எண்ணங்களை எண்ண வேண்டாம்!

தலைவி:– அவர் உறுதியாக வருவார் என்று எப்படியடி நம்புவது?

தோழி:– அவருடைய மலை நாடுதான் நம்மை நம்புமாறு செய்கிறது.

தலைவி:– அவருடை மலை நாடா? என்னடி சொல்லுகிறாய் நீ?

தோழி:– அன்பிற்கினியவளே! நன்றாகக் கேள்! நான் அவருடைய நாட்டிற்குச் சென்றிருக்கின்றேன்–அதனை நன்றாகக்கண்டிருக்கிறேன்.

**ஜெகதீசன்**

தலைவி:– சொல்லடிகண்ணே! விரைவாய்ச் சொல்!

தோழி:– அதோ! நீ பார்த்துக் கொண்டிருக்கின்ற மலையிலிருக்கிறதே – அந்த மலையிலே நிறையக் குரங்குகள் இருக்கின்றன. அம்மலையின் அருகே கீழே ஒரு குளம் இருக்கின்றது. அந்தக் குளத்திலே காந்தள் மலர்கள் எண்ணற்றவை மலர்ந்து 'வெள்ளம் தீப்பட்டதுபோல்' விளங்கி நிற்கும். இனிய குழல் போல இசைபாடி வருகின்ற

# நானின்றி நீயில்லை!

வண்டுகள் அம்மலர்களிடை நுழைந்து மதுவைக் குடிக்கும். அக்குளத்திற்கு அயலாக அம்மலையிலுள்ள மரத்தில் வாழுங் குரங்குகள் அக் காட்சியைக் காணும். காந்தள் மலர்கள் கனன்றெரியும் நெருப்பாகத் தம் கண்களுக்குத்தோன்ற, 'ஐயோ! பாவம்! இவ்வண்டுகள் எல்லாம் அறியாமல் நெருப்பிடை வீழ்ந்தனவே" என்று வருந்தி மலையருவி நீரைத் தம் சிறு கையால் அள்ளி அள்ளித் தெளித்து அந்நெருப்பை அணைக்க முயலும்!

தலைவி:– தோழி! உண்மையாகவா?

தோழி:– ஆம்! அன்பே! என அவ்வண்டின்பாட்டைக்கூட அக் குரங்குகள் அழுகையொலியாகத் தான் எண்ணியிருக்கும். மலை நாட்டில் பகுத்தறிவற்ற விலங்கினத்திலேயே இத்தகைய அருள்வெள்ளம் பொங்கிப்பெருகுகின்றது! அப்படியிருக்கத் தன் உயிருக்கு உயிராக இருக்கும் உன்னை அவர் மறப்பாரா? அருள்பொழியாமல் இருப்பாரா? உன்னைத் துறந்து வேறெங்கோ பறப்பாரா? –நீயே எண்ணிப் பார்!

தலைவியின் முகத்தில் மகிழ்ச்சி மலர்கின்றது. என் உயிர் போன்றவளே! என் மனத்தில் நம்பிக்கையென்னும் நற்றேனை வார்த்தாயடி!" என்று கூறித் தோழியை அணைத்துக் கொள்கின்றாள்.

"நம்பிக்கையைத் தருவது நான் இல்லைநங்கையே! அதோ அந்த மலைதான் – நம்பிக்கை தரும் நன்மலை!" என்று கூறிக் குறும்பாகத் தலைவியின் கன்னத்தைக் கிள்ளுகிறாள் தோழி!

---

குழலிசை வண்டினங்கள் கோழிய செங்காந்தட்
குலைமேற் பாய:
அழலெரியில் சூழ்கினவால் அந்தோ அளியவென்று
அயல்வாழ் மந்தி
கழல்வனபோல் நெஞ்சயர்ந்து கல்லருவி தூஉம்:
நிழல்வரை நன்னாடன் நீப்பனோ அல்லன்.

(யாப்பருங் கலக்காரிகை மேற்கோள் பாடல்)

---

## பணவீக்கம்தான் காரணம்!

"'விலைவாசி உயர்வுக்குக்காரணம் டெல்லி சர்க்காரில் ஏற்பட்டிருக்கிற பணவீக்கம்தான்! அதைத்தான் தி. மு: கழகம், சென்ற பொதுத் தேர்தலில், 'நாட்டு வாட்டம் போக்கிட சர்க்கார் நோட்டடித்தால் மட்டும் போதாது' என்று சுவரொட்டிகள்மூலமாக அறிவித்தது.

"இந்த நாட்டிலிருந்து ஏற்றுமதிக்கு வழியில்லை. ஆனால் வெளிநாடுகளிலிருந்து அதிக அளவில் இறக்குமதிசெய்யப்படுகிறது. அதற்கு நம்முடைய நாட்டுப் பணத்தைக் கொடுத்தால் வெளிநாட்டார் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள், தங்கம்தான் கொடுக்கவேண்டும். இறக்குமதிகள் அதிகம் செய்வதால் ஏராளமான தங்கம் கொடுக்கப்பட்டு பணவீக்கம் ஏற்பட்டிருக்கிறது. ஏற்றுமதிகள் அதே அளவிற்குச் செய்தால் அந்தத் தங்கத்தை ஈடுசெய்ய முடியும் விலைவாசிகளையும் கட்டுப்படுத்த முடியும்.

"நம்முடைய நாட்டில் இப்போது ஏற்றுமதி அடியோடு குறைந்து விட்டது. பல பொருள்களை நாம் வெளிநாடுகளிலிருந்து வாங்குகிறோம். இப்படி வாங்குவதால் நம்முடைய நாட்டில் இருக்கிற தங்கம் வெளிநாட்டுக்குப் போகிறது. நோட்டைக் கொடுத்தால் வெளிநாட்டான் வாங்க மாட்டான். எல்லா நாடுகளும்பொதுவாக ஏற்றுக்கொண்டிருக்கிற பொருள் தங்கம் ஒன்றுதான். எனவே நம்முடைய நாட்டிலிருந்து தங்கம் பூராவும் வெளிநாடுகளுக்குப் போகிறது. வெளிநாடுகளிலிருந்து தங்கம் நம்முடைய நாட்டிற்கு வருவதற்கு வழி இல்லை!

— நாச்சியார் கோவிலில், அண்ணா

# தலைமைப் பீடம்...!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டின் உரிமைக்கு சவால் பிறக்கிறது. விழிப்பு தேவைதான்.

ஆனால் சஞ்சீவரெட்டி தலைவராவார் என்ற முடிவை ஏகோபித்து ஏற்றனரா என்றால் அதுவும் இல்லை. "இதிலேஎன்னசிறப்பு இருக்கிறது! ஒரு மாநிலத்தின் முதன் மந்திரி வேலையைத் துறந்து ஒருவர் தலைவராகிறார். அதைத் தவிற வேறு ஒன்றையும் சிறப்பாகக் காண முடியவில்லை" என்று பீகார் மாநிலத்தைச் சேர்ந்த பிரபல தலைவர் முறையிட்டுள்ளார். அவரது குற்றச்சாட்டு தென்னாடு தாண்டினால் சஞ்சீவரெட்டியை யாருக்கும் தெரியாது என்பது!

சுசேதாகிருபளானியை தலைவராக்கலாம் என்ற எண்ணத்தை வெளியிட்டுள்ளோரும் இருக்கின்றனர். பெருந் தலைவர்களின் விருப்பத்திற்கு எப்படி குறுக்கே நிற்பது என்பதுதான் அவர்கள் கவலை.

காங்கிரஸ் இன்று கலனான கட்டிடமாக இருக்கிறது. ஒவ்வொரு மாநிலத்திலும் கோட்டைக்குள்ளே குத்துவெட்டு. தலைமைப்பதவி ஜொலிப்பானதென்றாலும் சொகுசு இல்லை. எனினும் தெற்கு என்றால் கொஞ்சம் சிரமமாய் இருக்கிறது.

யார் காங்கிரஸ் தலைவராகவர வேண்டும் என்பதிலே நமக்கு அக்கரையில்லை. இருந்தாலும் வடக்கு-தெற்கு என்று பேதம் பேசுகிறார்கள் என்று நம்மை குறை கூறும் காங்கிரஸ் குணாளர்கள் நிறைய இருக்கிறார்கள். ஆனால் சந்தர்ப்பங்கள் வரும்போது வடவர் தங்கள் உள்ளுணர்ச்சிகளைக் காட்ட தவறுவதில்லை.

சஞ்சீவரெட்டியைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் தென்னகத்தின் நியாயமான உரிமைகளை மதித்தாக இருக்கும் என்று சென்னையிலிருந்து வரும் புதிய தினசரி ஏடு ஒன்று எழுதுகிறது.

எங்கே மதிக்கிறார்கள்? நேரு சொல்லியும் பந்த் சொல்லியும் சல சலப்பேன்? தென்னகத்திலிருந்து ஒருவர் தலைவராக வருவதால் பெரும் மாறுதல் ஏற்பட்டு சாகும் காங்கிரசை பிழைக்க வைக்கப் போவதில்லை. பெரிய பெருமையான பீடத்தில் அமர்ந்திருக்கவும் போவதில்லை.

பத்து ஆண்டுகளாக தென்னாட்டிலிருந்துகாங்கிரசிற்கு ஒரு தலைவரை தேர்ந்தெடுத்ததில்லை. அதற்கு முன்பு இருந்த பட்டாபி சீத்தாராமய்யா பெற்ற இடம் கூட அவர் எழுதிய புத்தகத்தை அடிப்படையாக் கொண்டிருக்கிறதே தவிற அக்கிராசனப் பதவியையல்ல. அதேபோல் சஞ்சீவரெட்டியை சாகும் காங்கிரசிற்கு சஞ்சீவியாகக் கருதி அமர்த்த முயற்சிக்கக்கூடும். ஆனால் எந்த சஞ்சீவியாலும் இனி காங்கிரசை பிழைக்கவைக்க முடியாது.

தென்னாட்டிற்கு மரியாதை என்றால் பூரிப்புடன் ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும். ஏன் இந்த அருவெறுப்பு? ஏன் இந்த அலட்சியம்?

"விந்தியத்தைத் தாண்டி சஞ்சீவரெட்டியை யாருக்கும் தெரியாதாம் – குற்றச்சாட்டு. தெரிய முடியவில்லை யென்றால் யார் தவறு? தென்னகத்தவர் யாரையும் வெளியே அறிமுகப்படுத்தவில்லையென்றுதானே பொருள்? காஷ்மீரம் முதல் கன்யாகுமரி வரை ஏகபாரதம் என்கிறார்கள். நாலுபேர் பெ[...] வெளியே தெரியாது. இ[...]லும் இந்தியா ஒன்று என[...] வெட்கமில்லாமல் சொல்லுகிறார்கள். சஞ்சீவ ரெட்டி யென்ன? சுதந்திரப் போராட்டம் இல்லாதிருந்தால் ஜவஹர்லால் நேரு பெயர் கூடத்தான் உத்திர பிரதேசத்தைத் தாண்டி வெளியே தெரிந்திருக்காது. அதனையே கொள் முதலாக வைத்து பல்வேறு இனங்கள், நாடுகள் கொண்ட பெரும் பூபாகத்தை 'ஒன்று' 'ஒன்று' என்று எத்தனை நாளைக்கு ஏமாற்றுவது?

சஞ்சீவ ரெட்டிக்கு சிம்மாசனம் தயாரிப்பதனாலேயே காங்கிரஸ் பெருந் தலைகளுக்கு தென்னகத்தின் மீது வாஞ்சை என்று எப்படிச் சொல்வது? ஒருவேளை வடக்கே இருப்பவர்களை அந்த இடத்தில் வைப்பது வம்பை விலைக்கு வாங்கியதாய் முடியும் என்ற சுயநலமாகவும் இருக்கலாம்!

ஒன்று தெரிகிறது. கடந்த தலைமைப்பீட தேர்தலின்போது நேருவின் குமாரத்தியை நாயகி ஆக்கியபோது புதியரத்தம் புதிய ரத்தம் என்றுஆர்ப்பரித்தார்கள். இளைஞர்கள் கையில் பொறுப்பு என்று விளக்கம்உரைத்தார்கள். நேருவுக்கு நேர் வாரிசாகக்கூட அமைந்துவிடுவார்களோ என்று கூட நம்பினார்கள். இவ்வளவு விரைவில் அந்த அம்மையாருக்கு ஓய்வு தேவைப்படுகிறது! அவர்கள் சாதனை என்ன? கட்சி அடைந்துள்ள குறிப்பிட்ட முன்னேற்றமென்ன என்பதைப்பற்றியெல்லாம் யாரும் பேசக்கூடாது ஏனென்றால் பெரிய இடத்து விஷயம்!

இந்த தலைமைப் பதவிக்கு நேருவின் வீட்டு தாழ்வாரத்தில் தானா ஒதுங்க வேண்டும். இவ்வளவு பெரிய உப கண்டத்தில் ஆளேயில்லையா என்று கேட்டோம். நேருவின் மகள் என்பதால் அல்ல. அவர்களுக்கே ஆற்றல் இருக்கிறது என்றார்கள். அந்த ஆற்றல் இவ்வளவு விரைவில் செலவாகியிருக்கிறது. யாரும் சிந்து வாரைக் காணோம். இந்திராகாந்தியின் மகுடாபிஷேகத்தில் மிகுந்தஅக்கரை காட்டிய காமராஜரே கூட சஞ்சீவரெட்டியின் பக்கம் சாய்ந்து நிற்கிறாரும்! இவ்வளவு விரைவில் விடை பெறலாமா, அம்மணி. என்று கேட்பவரைக் காணோம்.

நேரு அவர்கள்கருத்து தனக்கு பிடிக்க வில்லையென்றால் அதை எதிர்த்து "நீங்கள் கூறுவது சரியானதல்ல" என்று தைரியத்துடன் சொல்லும் ஒரே முதலமைச்சர் சஞ்சீவரெட்டிதான் என்று ஆந்திரநாட்டு முன்னாள் அமைச்சர் ஒருவர் கூறினாராம்.

அக்கிராசனப் பதவியில் அமர்ந்தவுடன் அந்த அஞ்சா நெஞ்சம் என்ன ஆகப் போகிறதோ என்பதை காலம்தான் சொல்லவேண்டும். இங்கே கூடத்தான், கடந்த திங்களில் சென்னை நகரசபையில் தென்னகம் ஒருமித்த குரலில் போராட வேண்டும் என்றுகூறினார். அதுவெல்லாம் இப்போது பேசினால் அவர் அலங்கரிக்கும் உயர்ந்த இடத்தின் அந்தஸ்து என்னாவது?

ஆனால் இங்கேயுள்ள காங்கிரஸ் மேடையிலே மந்திரிமார்களும் பிரசங்கிகளும் சில நாட்கள், "வடக்கு தெற்கு என்கிறார்கள், அது வெல்லாம் தவறு. காங்கிரஸ் தலைவரே தெற்குத் தான்" என்று பேசப்போகிறார்கள். வெறும்வாயை மென்று கொண்டிருந்தவர்களுக்கு அவல் கிடைத்ததுபோல இது அமையும், தமிழ்நாட்டு காங்கிரஸ் நண்பர்களின் சிலநாள் பேச்சிற்கு சஞ்சீவியின் புதிய தலைமைப் பீடம்தான் கருப்பொருளாக இருக்கும். அது தவிறவேறுபலன் சஞ்சீவரெட்டியின் காங்கிரஸ் தலைவர் தேர்தலில் இல்லை.


## தித்திக்கும் தேன் செய்தி!

★

- ★ புத்தம் புதிய அம்சங்களுடன்
- ★ எண்ணத்தை கிளறும் வண்ண ஓவியங்களுடன்
- ★ பனிரெண்டு பக்கங்களுடன்
- ★ விரைவில் 'தென்னகம்' வெளிவரும்.


## பொற்கூண்டு – – தேவைதானா?

"அயிந்தன்"

மாடுண்டு வீடுண்டு அன்புபேணும்
மனையாளும் மழலைச்சொல் குழவியுண்டு
ஓடுகின்ற ஓடைமலர்ச் சோலைகண்டு
உவகையுடன் எழில்பருகிப் பண்ணமைத்து
பாடுகின்ற பாவாணர் மிக்கவுண்டு
பழகுதமிழ் இசைகூட்ட அரங்கின்கண்ணே
ஆடுகின்ற காட்சியெலாம் காணக்களிப்(பு)
அலையெனவே உள்ளத்தே பாய்தல் இன்பம்

வான்வெளியிற் சிறகடித்துப் பறந்துசென்று
வளர்மரத்தே அடவியிலே உயர்ந்தகோட்டில்
தான்அமைத்த கூட்டினிலே பேடையோடு
தழுவிமகிழ் வெய்துமணிக் கிள்ளைதன்னை
ஏன்பிடித்துப் பொற்கூண்டு சேர்த்தாரிங்கு
என்னபயன் பாற்சோறும் கனியளித்தும்
நான்வாழு கின்றநாள் அஃதேபோலும்
நாடாண்டோர் அடிமையெனும் கூண்டுசேர்ந்தார்

கூடுகளில் தன்விருப்ப மோடுவாழும்
சிவ்வைசகுப் பொற்கூண்டு தேவைதானா
நாடுண்டு எங்களுக்கு அடிமைவேண்டோம்
நாங்கள்தனி விடுதலையின் பறவைகண்டீர்
பாடுபட்டுத் தென்னகத்தைக் காத்தோமுன்னாள்
பார்மெச்ச வாழ்ந்துவந்த திராவிடர்க்கு
வீடுண்டு அடிமையெனும் கூண்டழித்து
விழிப்புற்றோம் எனும்போதே பாய்தல் இன்பம்!

அச்சிடுபவர் : கே. இராசாராம், பி.ஏ., கஸ்தூரி லித்தோ ஒர்க்ஸ், 34, சின்னத்தம்பி தெரு, சென்னை–1.
ஆசிரியரும், வெளியீடுபவரும் : கே. ஏ. மதியழகன், பி.ஏ., 126, மவுண்ட் ரோடு, சென்னை–6.